24.6.2021

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2012–2013ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள்– 19.02.2021 முதல் 18.02.2024 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை**

அரசாணை (1டி) எண்.87

நாள் 21.06.2021
திருவள்ளுவராண்டு 2052
பிலவ வருடம், ஆனி 7
படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண்.277, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 30.10.2012.
2. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 6.6.2014.
3. அரசாணை(நிலை)எண்.88, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.06.2014.
4. அரசாணை (1டி) எண்.373, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 17.05.2018.
5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.006743/எல்/இ3/2021, நாள் 03.02.2021.

-------

**ஆணை**:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் 2011–2012ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவாறு ஏற்கனவே இயங்கி வரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கென ரூ.4800–10000 + தரஊதியம் ரூ.1300/– என்ற ஊதிய விகிதத்தில் 4393 ஆய்வக உடனாள் பணியிடங்கள் மற்றும் ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.2400/– என்ற ஊதிய விகிதத்தில் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், ஆக மொத்தம் 6157 பணியிடங்களை அவை நிரப்பப்படும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு திருத்தம் செய்து ஆய்வக உடனாள் என்ற பணியிடத்தை ஆய்வக உதவியாளர் பணியிடமாக மாற்றி ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400/– என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முதாலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பிற்கு திருத்தம் வெளியிடப்பட்டது. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இப்பணியிடங்களுக்கு கடைசியாக 19.02.2018 முதல் 18.02.2021 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காண் 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு காலம் 18.02.2021 உடன் முடிவடைந்துள்ளதால், 19.02.2021 முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வழங்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டு ஏற்கனவே இயங்கி வரும்

உயர்நிலைப் பள்ளிகளுக்கென 2011–2012ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு (இணைப்பில் உள்ளவாறு) ரூ.19500–62000 நிலை–8 என்ற ஊதிய விகிதத்தில் 19.02.2021 முதல் 18.02.2024 வரை மூன்றாண்டுகளுக்கு அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள 6157 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – BC அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல் – 301 சம்பளங்கள்." (த.தொ.கு 2202–02–109–BC-30100)

இச்செலவினம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட நிதியிலிருந்து மீள பெறப்பட வேண்டும். அவ்வாறு மீளப்பெறப்படும் தொகை உடனுக்குடன் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:–

"4202 கல்வி, போட்டி, விளையாட்டுகள், கலையும் பண்பாடும்–01 பொதுக் கல்வி – 202 இடைநிலைக் கல்வி – AL அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் ஏற்படும் செலவுகளை ஈடு செய்தல்." (த.தொ.கு 4202–01–102–AL–0003)

7. இரண்டாண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்கள் அரசின் ஒப்புதல் பெற்று நிரப்பப்பட வேண்டும். இரண்டாண்டுகளுக்கு நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களின் தற்போதைய தேவை குறித்து ஆய்வு செய்து உபரி பணியிடங்கள் இருப்பின் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.23294/கல்வி–II/2021, நாள் 16.06.2021ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை–6.
திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
நகல்
நிதித் (கல்வி–II/வரவு செலவு (பொது–II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/6/2021
அரசு சார்புச் செயலாளர்

22/6/21

அரசாணை (1டி) எண்.87, பள்ளிக் கல்வி (ப.க.4(1)த் துறை, நாள் 21.06.2021–ன் இணைப்பு

| வ. எண் | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆய்வக உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 89 | 89 |
| 2 | சென்னை | 96 | 45 |
| 3 | கோயம்புத்தூர் | 156 | 59 |
| 4 | கடலூர் | 157 | 36 |
| 5 | தர்மபுரி | 138 | 56 |
| 6 | திண்டுக்கல் | 110 | 46 |
| 7 | ஈரோடு | 121 | 32 |
| 8 | காஞ்சிபுரம் | 197 | 63 |
| 9 | கன்னியாகுமரி | 126 | 96 |
| 10 | கரூர் | 77 | 49 |
| 11 | கிருஷ்ணகிரி | 171 | 112 |
| 12 | மதுரை | 147 | 73 |
| 13 | நாகப்பட்டினம் | 113 | 83 |
| 14 | நாமக்கல் | 123 | 50 |
| 15 | நீலகிரி | 77 | 68 |
| 16 | பெரம்பலூர் | 51 | 51 |
| 17 | புதுக்கோட்டை | 162 | 31 |
| 18 | இராமநாதபுரம் | 91 | 59 |
| 19 | சேலம் | 206 | 83 |
| 20 | சிவகங்கை | 103 | 35 |
| 21 | தஞ்சாவூர் | 179 | 72 |
| 22 | தேனி | 88 | 42 |
| 23 | திருவள்ளூர் | 178 | 40 |
| 24 | திருவாரூர் | 106 | 44 |
| 25 | தூத்துக்குடி | 62 | 55 |
| 26 | திருச்சி | 149 | 20 |
| 27 | திருநெல்வேலி | 136 | 42 |
| 28 | திருப்பூர் | 103 | 48 |
| 29 | திருவண்ணாமலை | 239 | 45 |
| 30 | வேலூர் | 275 | 63 |
| 31 | விழுப்புரம் | 255 | 49 |
| 32 | விருதுநகர் | 112 | 28 |
| | மொத்தம் | 4393 | 1764 |

Joint Director (NSS)
Directorate of School Education
Chennai - 600 006

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

ந.க.எண் 006743/ஜெ/இ3/2021 நாள்: 24.06.2021

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

Joint Director (NSS)
Directorate of School Education.
Chennai - 600 006

24/6/21